**OS.NO:42/2020**

**PW2 : திரு.உமாபதி**

நாள் : 05.02.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**
**1, 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

வாதி, 1ம் பிரதிவாதியின் தந்தையான வேலுவை எனக்கு தெரியும். வேலு மீது நான் ராணிப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.135/2002 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அந்த வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால், சரிதான். அந்த வழக்கை வேலு இறந்த பிறகு 1ம் பிரதிவாதிதான் முன் நின்று நடத்தினார் என்றால், வேலுவின் வாரிசுகளான 4 பேரும் முன் நின்று நடத்தினார்கள். அந்த வழக்கு சம்மந்தமாக ராணிப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் EP.22/2022 என்ற எண்ணில் தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். அந்த நிலுவையில் உள்ள EP.22/2022 என்ற வழக்கில் 1ம் பிரதிவாதி முருகானந்தம் மட்டும் தான் நடத்துகிறார் என்றாலும், மற்ற வாரிசுகளான அசோகன், சிவகாமி, கங்கா ஆகியோர் ஒருதலைபட்சம் ஆகிவிட்டனர் என்றால், அந்த நிறைவேற்று மனுவினை முருகானந்தம், அசோகன், சிவகாமி, கங்கா ஆகிய எல்லோரும் சேர்ந்து நடத்துகிறார்கள். முருகானந்தம் மட்டும் தான் அந்த நிறைவேற்று மனுவில் வழக்கறிஞர் வைத்து, என்னை குறுக்கு விசாரணை செய்தார் என்றாலும், மற்றவர்கள் வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தவில்லை என்றால், எனக்கு தெரியாது. அந்த நிறைவேற்று மனுவில் மேற்படி நால்வரையும் நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்கவில்லை என்று சொல்லி, சிறைக்கு அனுப்ப வேண்டுமென பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், சரிதான். கிருஷ்ணன் ரெட்டி குமாரர் மணி என்பவரை எனக்கு தெரியும்.

முத்து கிருஷ்ணன் ரெட்டி குமாரர் மணிக்கு, பி.ஆர் கிருஷ்ண ரெட்டி என்பவர் 29.07.1978 ல் கிரைய பத்திரம் முன்னிலைக்கு சொத்தை எழுதிக்கொடுத்துள்ள பத்திரம்தான் என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய பத்திரம் என்றால், அந்த பத்திரத்தில் பெயர் தவறுதலாக உள்ளது. அவர் யார் என்று எனக்கு தெரியாது. வேலுவின் சொத்துக்கள் பற்றிய முழு விவரமும் எனக்கு தெரியாது என்றால், எனக்கு ஓரளவிற்கு தெரியும். வேலு சொத்துக்களை யாரிடம் வாங்கினார், பட்டாக்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியும். வேலு கிரையம் வாங்கிய கிரைய பத்திரங்களில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. வேலு சொத்தை கிரையம் வாங்க நான் தரகு எதுவும் பேசவில்லை. எனக்கும், 1ம் பிரதிவாதி முருகானந்தத்திற்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால், சரிதான். எனக்கும், வாதி அசோகனுக்கும் உறவுமுறை நன்றாக உள்ளது என்றால், சரிதான். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எனக்கு வரவில்லை என்றால், சரிதான். 03.01.2022 தேதியிட்ட கிரைய பத்திரம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியை பழிவாங்க நான், வாதியை தூண்டி அவர் மூலம்வழக்கு போட்டு, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும், தீய எண்ணத்தில் உருவாக்கப்பட்டவை என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

**S/d. M.Selvam,**
**I Additional District Judge,**
**Ranipet.**